Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 61/2019**

**வழக்கு சாட்சி எண். PW7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதன்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மனோகரன் | தொழில் | : | |
| கிராமம் | : | அயோத்தியாபட்டிணம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | சேலம் | வயது | : | 36 |

(1 முதல் 3, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5 மற்றும் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 4ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th** Day of **July 2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மருத்துவர் ராம்நாத் என்பவர் கடந்த 03.02.2016ம் தேதி மேற்படி அரூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மாலை 3 மணியளவில் சந்திரா என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரியாத 1 நபர் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு 1) மேல் பல்வரிசையில் 1 பல் ஆடிக்கொண்டிருந்தது. 2) முதுகுபகுதியில் வலி இருப்பதாக கூறினார்.

அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. நுண்கதிர் புகைப்படத்தில் எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை. பல்மருத்துவரின் கருத்துரை பெறப்பட்டது. அவர் வெளிநோயாளிக சிகிச்சை பெற்றுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளார். (**காயச்சான்று அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

மருத்துவர் ராம்நாத் என்பவர் கடந்த 03.02.2016 ம் தேதி மேற்படி அரூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மாலை 5 மணியளவில் ராஜி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரியாத 1 நபர் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு 1) இடது முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 2) முதுகுபகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. நுண்கதிர் புகைப்படத்தில் எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை. கண் மருத்துவரின் கருத்துரை பெறப்பட்டது. அவரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளார். (**காயச்சான்று அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சந்திராவிற்கு எவ்வித காயமும் இல்லை என்றால் அவருக்கு பல் ஆடிக்கொண்டிருந்ததால் அது குறித்து பல் மருத்துவரின் அறிக்கை பெறப்பட்டது. பல் மருத்துவர் தனது அறிக்கையில் காயம் குறித்து குறிப்பிடவில்லை. சாட்சி சந்திரா வலி இருப்பதாக கூறுவது பாவனையாக இருக்கலாம் என்றால் சரிதான். சாட்சி ராஜி என்பவருக்கு ஏற்பட்ட சிராய்யப்பு காயம் தடுமாறி கரடுமுரடான பகுதியில் கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. முதுகில் வலி இருப்பதாக கூறுவது பாவனையாக இருக்கலாம் என்றால் சரிதான். பல் மருத்துவர் மற்றும் கண் மருத்துவர் அளித்த கருத்துரையில் குறிப்பாக காயம் குறிப்பிட்டு

வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**